# பொன்னும் பொருளும் இல்லை

பொன்னும் பொருளும் இல்லை
என்னிடத்தில் ஒன்றும் இல்லை
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
சொந்தம் பந்தமும் எல்லாம் நீயே
என சொல்லி வந்தேன்
எந்தையும் என் தாயும் நீயல்லோ
நீயே என்னை ஆளும் மன்னவனல்லோ-(2)

**1**
நிலையில்லா உலகினில் நிலைத்து நான் வாழ்கையில்
நிம்மதி இழந்து நின்றேன் வழமில்லா வாழ்வினில்
வசந்தத்தைத் தேடி நான் அளவில்லா பாவம் செய்தேன்
தனது இன்னுயிரை பலியென தந்தவரை
உனக்கு நான் எதை அளிப்பேன் - இன்று
உனக்கு நான் எனை அளித்தேன்

(பொன்னும் )

**2**
வறுமையும் ஏழ்மையும் பசியும் பிணியும் ஒழித்திட உழைத்திடுவேன்
அமைதியும் நீதியும் அன்பும் அறமும் நிலைத்திட பணி செய்வேன்
உன்னத தேவனே உனதருள் கருவியால்
உலகினில் வாழ்ந்திடுவேன் - என்றும்
உன் நிலை வளர்ந்திடுவேன்

(பொன்னும் )